உ.

கடவுள்துணை.

# சிங்காரரசமஞ்சரி வினாவிடைச்

## சுருக்கம்.

---

இஃது

சேலம் - சுகவனமுதலியார்

குமாரன்

சே மாரியப்பமுதலியால்

இயற்றப்பட்டு

---

சேலமஜில்லா

சபார்டிநேட் ஜட்ஜியவர்களாகிய

ம-ா-ா-ஸ்ரீ.

கு - நரசிம்முலுநாயக்கரவர்களின்

உதவியினால்

---

சென்னை.

ஸ்ரீதாமுத்திராக்ஷரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1876.

*Registered. Copy-right.*

# குறிப்புகள்.

| | | |
|---|---|---|
| (உ-ம்) | ... ... | உதாரணம். |
| சி | ... ... ... | சிங்கார. |
| ர | ... ... ... | ரசமஞ்சரி. |
| மு | ... ... ... | முதலாவது. |
| இ | ... ... ... | இரண்டாவது. |
| மூ | ... ... ... | மூன்றாவது. |
| கு | ... ... ... | குச்சம். |

உ

கடவுள்துணை.

# சிங்காரரசமஞ்சரி

## வினா விடைச்

சுருக்கம்.

## சிறப்புப்பாயிரம்.

பழநாபுரியிலிருக்கும்.

மஹா

வித்வகுலசிரோமணியாகிய

ம-ா-ா-ஸ்ரீ.

**மாம்பழக்கவிச்சிங்கநாவலரவர்கள்**

பாடிய

ஆசிரியவிருத்தம்.

மணிகொண்டதிரைமகரவாரிபுடைசூழ்புவி
வளைப்பின்முன்னூலின்வழியே
வல்லாருமல்லாருமெல்லாருமினிதுணர
மானசெங்குந்தர்மரபில்
வருசுகவனேந்த்ரனருண்மாரியப்பக்குரிசில்
வகைவகைதொகுத்துரைத்த
மதனசிங்காரரசமஞ்சரிவினாவிடையை
மனதிலங்கீகரித்துக்

# சிறப்புப்பாயிரம்.

கனிகொண்டசென்னையச்சேற்றியாங்கவனது
கருத்தினையுநிறைவேற்றினன்
கருடதுரகதபுவனகாரண்க்ருபாநிதி
கடாக்ஷசற்குணவிலாசன்
கன்னடந்தமிழ்துலுக்கிந்துபிதெலுங்குமெய்க்
கலையுந்தெரிந்துக்ரந்த
காவ்யவிதநாடகாலங்காரபாரதங்கலை
கண்டறிடபாண்டித்யவான்
அணிகொண்டமதுரரசசங்கீதசாயித்ய
வதுலனிங்கலீஷினுமுயர்ந்
தனகருபின்விக்டோரியாதயவுமேன்மேலு
மபிவிர்த்தியாய்த்தழைக்க
வமைகவர்னர்ஜெனரல்முதல்யாருஞ்சபாசென்
றடிக்கடிவியந்துமெச்ச
வற்புதசுலக்ஷணசபார்டிநேட்ஜட்ஜியா
யதிகாரமுறைநடாத்தித்
திணிகொண்டசேலநகர்வீற்றிருக்குந்தரும
சீலன்பராநுகூலன்
ஸ்ரீமஹாலக்ஷ்மிபாரதிசதாநடனமிடு
திவ்யசமுகப்ரதாப
திரசூருகுலராமசாமிமால்வரபுத்ர
திலககர்ணவதாரன்
சிகரபுயபாரசூநரசிம்முலுப்ரபு
சிலாக்யசவுபாக்யதுரையே !

முற்றும்.

உ

கடவுள்துணை.

# சிங்காரரசமஞ்சரி

## வினா விடைச்

## சுருக்கம்.

### காப்பு.

நேரிசைவெண்பா.

மாமலிசிங்காரரசமஞ்சரிவினாவிடையைப்
பாமலிமுன்னூலின்படிபகரப் — பூமலர்தூ
யற்பகல்வழுத்துமடியார்க்கருள்பழுத்துதவு
கற்பகமதக்களிறுகாப்பு.

### முதலாவதுருச்சம்.

## நாயகிகளினிலக்கணம்.

வினா. சிங்காரரசமஞ்சரியாவதுயாது?

விடை. நாயகி நாயகர்களின் அவஸ்தா பேதங்களினால் உண்டாகும் இயல்பை யெடுத்துக் காட்டும் பொதுநூலாம்.

வினா. அவஸ்தாபேதமாவதுயாது?

விடை. அந்தந்தச் சமையங்களில் நாயகி, நாயகர்களுக்குண்டாகும் தோற்றம் அல்லது உதயமாம்.

| | |
|---|---|
| வினா. | நாயகியின்பேதங்க ளெத்தனை? |
| விடை. | ஸ்வீய்யா, பரகிய்யா, சாமான்யா வென மூன்றுபேதங்களாம். |
| வினா. | ஸ்வீய்யா வென்பவள்யார்? |
| விடை. | விதிப்படி மணஞ்செய்துக்கொண்ட புருஷனிடம் நீஙகாப்பிரியமுள்ள பதிவிரதையேயாம். |
| | (உ-ம்) சி. ர. மு. கு. ௩-வதுபாட்டு. |
| வினா. | பதிவிரதையென்பவள் யார் ? |
| விடை | கணவனுடைய விரதத்தைக் காப்பாற்றப் பட்டவளேயாம். |
| வினா | ஜீயாள் சேஷ்டைக ளெவை ? |
| விடை. | கணவனால் ஏவப்பட்ட ஏவல்களை வெறுப்பின்றிச் செய்தலும், ஆசாரமும், பொறுமையும், குடிலமில்லாமையும், இவைபோன்ற சற்குணஙகள் பலவும சேஷ்டைகளாய்ப்ரகாசிக்கும். |
| | (குடிலமென்றால் வஞ்சகம்.) |
| வினா. | மேற்சொல்லிய ஸ்வீய்யாவின் பேதங்களெத்தனை ? |
| விடை. | முக்தா, மத்யா, ப்ரவ்டா வெனமூன்று பேதங்களாம். |
| வினா. | முக்தா என்பவள் யார் ? |

**விடை.** தனக்கு நூதனமாகத்தோன்றிய யவ்வனத்தையுடைய நாயகியேயாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. ௮-வது பாட்டு.

**வினா.** முக்தாவில் ஏதேனும் பேதங்களுண்டோ?

**விடை.** அஞ்ஞாதயவ்வனை யென்றும், ஞாதயவ்வனையென்றும் இரண்டுபேதங்களுண்டு.

**வினா** அஞ்ஞாதயவ்வனை யென்பள்யார்?

**விடை.** தனக்குவந்தயவ்வனத்தை யறியாத நாயகியேயாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. ௧௦-வது பாட்டு.

**வினா.** ஞாதயவ்வனையென்பவள்யார்?

**விடை.** தனக்குவந்தயவ்வனத்தன்மையை யறிந்துகொண்ட நாயகியேயாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. ௧௧-வது பாட்டு.

**வினா.** மேலிருவருக்குள்ளும் ஏதேனும்பேதங்களுண்டோ?

**விடை.** நவோடா, விஸ்ரப்தநவோடாவென இருவிதபேதங்களுண்டு.

**வினா.** நவோடா வென்பவள்யார்?

**விடை.** நாயகன் சமீபத்திற் படுக்கவும் சம்மதமில்லாமற்றத்தளிக்கின்ற நாயகியேயாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. ௧௪-வது பாட்டு.

வினா. விஸ்ரப்தநவோடா வென்பவள் யார்?

விடை. நாயகனுடன் படுத்தும் அங்கசங்கோசநீங் காதிருக்கின்ற நாயகியேயாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. கரு-வது பாட்டு.

வினா. ஈண்டுகூறிய நவோடைகளின் குணங்களெவை?

விடை. வெட்கத்தினால் தமது மனக்குறிப்பைச் சகிமுதலோர்க்கு வெளியிடாதிருக்கையும், நூதனநூதனமான பலவித ஆபரணாதிகளிடசதே யுண்டாகும் விருப்பமும், கோபநேரானறிய சமயதில் இனித்த மிருதுவார்த்தையும் ஷை. நாயகிகளின் குணங்களேயாம்.

வினா. மத்யாவென்பவள்யார்?

விடை. மதனகேளிப்பிரியமும், வெட்கமுஞ் சமமாகவுடைய நாயகியேயாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. கஎ-வது பாட்டு.

வினா. மேற்சொல்லிய மத்யாவில் ஏதேனும்பிரிவு உண்டோ?

விடை. அதிவிஸ்ரப்த நவோடா நாயகியென்றோர்பிரிவு உண்டு.

வினா. அதிவிஸ்ரப்த நவோடாவென்பவள் யார்?

விடை. மேற்குறிப்பிட்டமத்யாதானே வெட்கத்தை யதிகமாகக் கொண்டிருக்குஞ் சமயத்

தில், அதிவிஸ்ரப்த நவோடாநாயகியா வாள்.

(உ-ம்) சி. ர. மு. கு. கஅ-வது பாட்டு.

வினா. மத்யாநாயகியின் குணங்கள் எவை?

விடை. தனதுநாயகன்அபராதஞ்செய்தகாலத்தில்த யிரிய மிருந்தால் வக்கிரவார்த்தையும், தயிரிய மில்லாவிடில கடினவார்த்தை யும், பேசுவதேயாம்.

(வக்கிரம் என்றால் கொடுமை, பொறுமை; கடினமென்றால், முறைப்பு.)

வினா. ப்ரகல்பாவென்பவள்யார்?

விடை. தனதுகணவன் மனமுருகும்படி மதனகிரீ டைசெய்யும் சமர்த்துடைய நாயகியே யாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. உ0-வது பாட்டு.

வினா. ப்ரகல்பாவில் ஏதேனும் பேதங்களுண்டோ?

விடை. சுரதப்ரியாவென்றும், சுரதானந்தமோஹி தாவென்றும் இருவிதபேதங்களுண்டு

வினா. சுரதப்ரியாவென்பவள் யார்?

விடை. கலவியைத்தானே விசேடித்து விரும்புகின் ற நாயகியேயாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. உக-வது பாட்டு.

வினா. சுரதானந்த மோஹிதாவென்பவள் யார்?

விடை. கலவியாலுண்டாகிய இன்பத்தில் அதிகமகி ழ்ச்சியை யடைகின்ற நாயகியே யாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. உஉ-வது பாட்டு.

வினா. மத்யா, ப்ரகல்பாவென்ற பெண்களுக்குள் ஏதேனும் பேதங்களுண்டோ?

விடை. இவர்களுக்குக் கோபம்வந்தசமயத்தில் தீரா, அதீரா, தீராதீராவென்ற பேதங்களுண்டு.

வினா. தீராவென்பவள் யார்?

விடை. தயிரியமுடைய நாயகியே யாம்.

வினா. அதீராவென்பவள் யார்?

விடை. தயிரியமற்ற நாயகியே யாம்.

வினா. தீராதீராவென்பவள் யார்?

விடை. தயிரியமிருந்து மிராதநாயகியேயாம்.

வினா. இஇருபெண்களுள்ளும் இப்பேதங்கள்வமுங்குவதால் எத்தனைபிரிவுகளுண்டாகின்றன?

விடை. மத்யதீரா, மத்யாதீரா, மத்யதீராதீரா, ப்ரவ்டதீரா, ப்ரவ்டாதீரா, ப்ரவ்டதீரா தீராவென்ற ஆறுவகைபேதங்களுண்டாகின்றன.

வினா. மத்யதீரா வென்பவள் யார்?

விடை. கணவனுக்குத் தனதுகோபக்குறிப்பை யுபசாரவசனங்களால் அறிவிக்கும் நாயகியேயாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. உரு-வது பாட்டு.

வினா. மத்யாதீராவென்பவள்யார்?

விடை. மேற்கூறியபடி கோபக்குறிப்பைக் கடின வசனங்களினாலும் அழுகையினாலும் அறிவிக்கும்நாயகியே யாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. உரு-வது பாட்டு.

வினா. மத்திய தீராதீரா வென்பள் யார்?

விடை. அக்கோபக்குறிப்பை உபசாரச்சொல், கடுஞ்சொல், அழுகையிம் மூன்றாலும் அறிவிக்கும் நாயகியேயாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. உஎ-வது பாட்டு.

வினா. ப்ரவ்டதீராவென்பவள்யார்?

விடை. கணவனுக்குத் தனதுகோபக்குறிப்பை, மதனகேளியிற் பிரியமில்லாதவள் போன்றிருத்தலாலே அறிவிக்கும் நாயகியேயாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. உகூ-வது பாட்டு,

வினா. ப்ரவ்டாதீராவென்பவள்யார்?

விடை. அக்குறிப்பை மிரட்டுதலாலும், தாடனங்களினாலும் அறிவிக்கும் நாயகியேயாம். (தாடனமென்றால் அடித்தல்.)

(உ-ம்.) சி. ர. மு. கு. ௩0-வது பாட்டு.

வினா. ப்ரவ்டதீராதீரா வென்பவள்யார்?

விடை. அக்குறிப்பைக் கலவிப்பிரியமில்லாதவள் போன்றிருத்தல், மிரட்டுதல், தாடனம் இம்மூன்றாலும் அறிவிக்கும் நாயகியேயாம்.

(உ-ம.) சி. ர. மு. கு. ௩௧-வது பாட்டு.

விஞ. ஈண்டுகூறிய தீரா, அதீரா, தீராதீரா என்பவர்களுள் ஒரோவழியேதேனும் பேதங்கள பரகாசிபபதுணடோ?

விடை. ஜேஷ்டா, கனிஷ்டாவென இரண்டுபேதங்கள் பரகாசிப்பதுணடு.

விஞ ஜேஷ்டாவென்பவளயாா?

விடை. கணவனுல அதிகசிநேகத்தைப்பெறற நாயகியேயாம்.

விஞ. கனிஷ்டாவெனபவளயார்?

விடை. கணவனுல கொஞ்சம் சிநேகததைபபெறற நாயகியேயாம்.

விஞ தீராமுதன் முனறுபேதங்களிலுஞ் ஜேஷ்டா கனிஷ்டாககளசேர எததனைபேதங்களுணடாகின்றன?

விடை. மத்யதீராஜேஷ்டாகனிஷ்டா, மத்யாதீரா ஜேஷ்டாகனிஷ்டா, மதயதீராதீரா ஜேஷ்டாகனிஷ்டா, ப்ரவ்டதீராஜேஷ்டா கனிஷ்டா, ப்ரவ்டாதீரா ஜேஷ்டாகனிஷ்டா, ப்ரவ்டதீரா தீராஜேஷ்டா கனிஷ்டா வென அறுவிதபேதங்களுணடாகின்றன.

விஞ. மத்யதீரா ஜேஷ்டாகனிஷ்டா வெனபவள் யார்?

விடை. மேற்குறித்தவைகளாலேயே இப்பேதங்களின் இலக்கணங்களை அறிந்துகொள்க.

(உ-ம்.) திராஜேஷ்டா கனிஷ்டாவுக்கும், அதிராஜேஷ்டா கனிஷ்டாவுக்கும, திராதிரா ஜேஷ்டா கனிஷ்டாவுக்கும், சி. ர. மு. கு. ௯௯. ௯௪. ௯௫-வது பாடல்களைப் பார்க்கவும்.

ஸ்வியாநாயகியின்பேதங்கள்

முற்றிற்று.

---

## பரகியாவின் இலக்கண ஆரம்பம்.

---

வினு. பரகியா வென்பவள்யார்?

விடை. கலியாணஞ்செய்துகொண்ட கணவனைவிட்டுப் பரபுருஷர்களை மனதிற்கோருகின்ற நாயகியேயாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. ரு-வது பாட்டு.

வினு. பரகியாவில் ஏதேனும்பேதங்களுண்டோ?

விடை. கன்னிகாவென்றும், பரோடாவென்றும் இருவிதபேதங்களுண்டு.

வினு. கன்னிகாவென்பவள்யார்?

விடை. தந்தைதாய் முதலானவர்களுக்கு அடங்கி

பரபுருஷர்களிட மிருக்கும் விருப்பத்தை மறைக்கும் நாயகியேயாம்.
(உ-ம்.) சி. ர. மு. கு. ௩௭ - வதுபாட்டு.

வினா. பரோடாவென்பவள்யார்?

விடை. விவாகஞ்செய்துகொண்ட கணவனுக்கடங்கி பரபுருஷர்களிட மிருக்கும் விருபத்தை மறைக்கும் நாயகியேயாம்.
(உ-ம்.) சி. ர. மு. கு. ௩அ- வதுபாட்டு.

வினா. மேலே சொல்லிவந்த பரகிய்யாவில் ஏதேனும் உட்பிரிவுகளுண்டோ ?

விடை. குப்தா, விதக்தா, லக்ஷிதா, குலடா, அநுசயானு, முதிதா, சாஹஸிகா, ப்ரதிபாசதுரா, அபலாபசதுரா வெனபலவுட்பிரிவுகளுண்டு.

வினா. குப்தாவென்பவள்யார் ?

விடை. தனதுகிரியா காரியங்களை மறைக்க வல்லமையுடைய நாயகியேயாம.

வினா. குப்தாவில் ஏதேனும் பேதங்களுண்டோ ?

விடை. வ்ருத்தசுரதகோபனு, வர்த்திஷ்யமாண சுரதகோபனு, வ்ருத்த வர்த்திஷ்யமாண சுரதகோபனுவென்ற பேதங்களுண்டு.

வினா. வ்ருத்தசுரதகோபனு, வென்பவள் யார்?

விடை. நடந்துவிட்ட கலவியை மறைக்கின்ற நாயகியேயாம்.

வினா. வர்த்திஷ்யமாண சுரதகோபனுவென்பவள் யார்?

| | |
|---|---|
| விடை. | பின்னே சொந்தமாக நடப்பதாகிய கிரீடைத் தொழிலை மறைக்கின்ற நாயகியேயாம். |
| விஞ | வ்ருத்தவர்த்திஷ்யமாண சுரதகோபனுவென்பவள் யார்? |
| விடை. | முன்னே நடந்துவிட்ட கலவியையும், பின்னே நடக்குங் கலவியையும் - மறைக்கின்ற நாயகியேயாம். |
| | குப்தாபேதத்திரிவித நாயகிகளுக்கும், |
| | (உ-ம்.) சி. ர. மு. கு. சங-வது பாட்டு. |
| விஞ. | விதக்தா வென்பவள் யார்? |
| விடை. | சமயோசித சாதுர்ய சாமர்த்திய மிகுந்த நாயகியே யாம். |
| விஞ. | விதக்தாவில் ஏதேனும் பேதங்களுண்டோ? |
| விடை. | வாக்விதக்தாவென்றும், க்ரியாவிதக்தாவென்றும் இரண்டு பேதங்களுண்டு. |
| விஞ. | வாக்விதக்தா வென்பவள் யார்? |
| விடை. | ஷெ சாமர்த்தியத்தை வார்த்தைகளால் காட்டுகின்ற நாயகியே யாம். |
| | (உ-ம்.) சி. ர. மு. கு. சரு-வது பாட்டு. |
| விஞ. | க்ரியாவிதக்தா வென்பவள் யார்? |
| விடை. | ஷெ சாமர்த்தியத்தைத் தொழிலால் காட்டுகின்ற நாயகியே யாம். |
| | (உ-ம்.) சி. ர. மு. கு. சகூ-வது பாட்டு. |
| விஞ. | லக்ஷிதாவென்பவள் யார்? |

விடை. இரகசியமற்ற தனது கிரியைகளை யெல்லோரும அறியும்படி வெளியாக்கிக் கொண்ட நாயகியே யாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. சஅ-வது பாட்டு.

விஞ. குலடாவென்பவள் யார்?

விடை. மனக்களிப்புடனே சாதிமார்க்கத்தை விடுத்தும் தன்வீடுவிட்டுப் புறஞ்சென்றும் அன்னியனைக் கூடித்திரிகின்ற நாயகியே யாம.

(உ-ம்.) சி. ர. மு. கு. சகூ-வது பாட்டு.

விஞ அநுசயானு வென்பவள் யார்?

விடை. தானும் அன்பனும் வழக்கப்படி பொருந்துகின்ற சங்கேதத்தலம் தவறிவிட்டதினலானாலும், பினபுகுறிக்குஞ் சங்கேதத்தலம் கிடைக்குமோ கிடையாதோ வென்ற சந்தேகத்தினலானாலும், தான் ஒரு சங்கேதத்தலத்திற்குப் போவதன் முன்னமே அன்பன் அவ்விடத்திற்குப் போயிருப்பானோ எப்படியோ வென்றானாலும மனவருத்தப்படுகின்ற நாயகியே யாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. ருக - ருஉ - ருங - வது பாட்டு.

விஞ. முதிதாவென்பவள் யார்?

விடை. தனதெண்ணப்படி சமையவமைவு கிடைக்கக்கண்டு சந்தோஷிக்கின்ற நாயகியே யாம்.

(உ-ம்.) சி. ர. மு கு. ௫௫-வது பாட்டு.

விந. சாஹஸிகாவென்பவள் யார்?

விடை செய்யமுடியாத காரியங்களையும் செய்வதற்குத் துணிகின்ற நாயகியே யாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. ௫௬-வது பாட்டு.

விந. ப்ரதிபாசதுராவென்பவள் யார்?

விடை. கொடிய தனதுவார்த்தைகளை அவ்வவ்வேளைக்குத் தகுந்தபடி மாற்றுகின்ற நாயகியே யாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு ௫௭-வது பாட்டு.

விந. அபலாபசதுரா வென்பவள் யார்?

விடை. மோசவார்த்தைகளைச் சமயமறிந்து சொல்லியும் விசனமதிகரித்தவள்போல் பொய்யாகவழுதும் கணவன் வேண்டிக்கொள்ளும்படி யுபாயஞ்செய்யத் தகுந்த நாயகியே யாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. ௫௮-வது பாட்டு.

பரகீயாவின்பேதங்கள்
முற்றிற்று.

---

## சாமான்யாவின் இலக்கண ஆரம்பம்.

---

விந. சாமான்யாவென்பவள் யார்?

விடை. பணங்கவர்ந்து சுகந் தகுந்தபடிகாட்டுகின்

ற நாயகியே யாம்.

(உ-ம்.) சி. ர. மு. ரு. சு-வது பாட்டு.

வினா | சாமான்யாவில் ஏதேனும் பேதமுண்டோ?

விடை | அநந்தக சாமான்யாவெனவொரு பேத முண்டு.

வினா. | அஃதியாள் லக்ஷணமியாது?

விடை. | தனகணவனுக்குப்பயந்து சிலகாலம் அன் மார்க்கசத்தினடந்து, பின்பு வெளிப்பேறி நானாமானவேசையாயிருப்பதேயாம

(உ-ம்.) சி. ர. மு. ரு. சுக-வது பாட்டு.

சாமான்யாவின்பேதம்

முற்றிற்று.

## மேற்குறித்ததிரிவிதநாயகிக ளின் பேதங்கள்.

வினா | திரிவித நாயகிகளில் எத்தனைமுக்கியமான பேதங்களுண்டு?

விடை. | முக்யா, ப்ரகல்பா வென்றவிருவர்களுந் தீராதிபேதங்களால் ஆறுவகையராகி, ஜேஷ்டாதி பேதங்களைச்சார்ந்து பன்னிரு வகையராகி, முன்னின்ற முக்தாவை யும் உடன்கூட்டி யெண்ணப்பதின்மூவகையராகி, பரகிய்யாபேதத்திருவரும் ஒருசாமானியையும் பொருந்தவே நா

யங்களால் பகுக்கப்படுகின்றன.

முற்றும்.

---

## திரிவித நாயகிகளின் பொதுலக்ஷணாரம்பம்

---

வினா. இனியிந்தத்திரிவித நாயகிகளுக்குஞ் சம்பந்தமான பொதுக்குணங்கூறுமுறையேதோ?

விடை. திரிவிதநாயகிகளுங் குணகாரணத்தால் உத்தமா, மத்யமா, அதமாவென்ற பேதங்களை யடைவதுண்டு.

வினா. உத்தமா நாயகியென்பவள்யார்?

விடை. தனது கணவன் குற்றஞ் செய்தாலும் தான் இதமே செய்கின்ற நாயகியேயாம.

(உ-ம்) சி. ர. மு. கு. கரு-வது பாட்டு.

வினா. மத்யமா நாயகியென்பவள்யார்?

விடை. கணவன் நன்மைசெய்தால் தானும்நன்மையேசெய்து, தீமைசெய்தால் தானுந்தீமையே செய்து வருகின்ற நாயகியேயாம்.

(உ-ம்.) சி. ர. மு. ரு. கசு-வது பாட்டு.

வினா. அதமாநாயகியென்பவள்யார்?

விடை. கணவன் நன்மைகளையேசெய்தாலும் அவற்றைத் தீமைகளாகவே பாவித்துக் கோபிக்கின்ற நாயகியே யாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. ௬௮-வது பாட்டு.

விஞ. மேலே சொல்லிவந்த நாயகிகளுக்குத் திருப்தாதி பேதங்களுண்டோ?

விடை. திருப்தா, அதிருப்தா, திருப்தாதிருப்தா வென்ற பேதங்களுண்டு.

விஞ. திருப்தாவென்பவள் யார்?

விடை. கிரீடையினாலே திருப்தியடைந்த நாயகியே யாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. ௭0-வது பாட்டு.

விஞ. அதிருப்தாவென்பவள் யார்?

விடை. கிரீடையினாலே திருப்தியடையாத நாயகியே யாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. ௭௧-வது பாட்டு.

விஞ. திருப்தாதிருப்தா வென்பவள்யார்?

விடை. கிரீடையினாலே திருப்தியடைந்தும் அடையாதவள் போலிருக்கின்ற நாயகியே யாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. ௭௨-வது பாட்டு.

விஞ. இன்னுமந்த நாயகிகளுக்குத்திவ்யாதிபேதங்களுண்டோ?

விடை. திவ்யா, அதிவ்யா, திவ்யாதிவ்யா வென்ற பேதங்களுண்டு.

விஞ. திவ்யாவென்பவள் யார்?

விடை. தேவருலகத்திருக்கும் நாயகியே யாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. எரு-வது பாட்டு.

விஞ. அதிவ்யாவென்பவள் யார்?

விடை. தேவருல கல்லாதவிடத்திருக்கும் நாயகியே யாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. எசு-வது பாட்டு.

விஞ. திவ்யாதிவ்யாவென்பவள் யார்?

விடை. முன்னமே தேவருலகத்திருந்தவளாய் அப்பால் யாதேனு மொருகாரணத்தால அதுவல்லாத வுலகததில்வந்து பிறந்திருக்கும நாயகியே யாம.

(உ-ம்.) சி. ர. மு. கு. எஎ-வது பாட்டு.

விஞ. பின்னுமந்த நாயகிகளுக்கு அன்யசம்போக துக்கிதாதி பேதங்களுண்டோ?

விடை. அன்யசம்போக துக்கிதையென்றும், வக்ரோக்திசர்விதையென்றும், மானவதியென்றும் பேதங்களுண்டு.

விஞ. அன்யசம்போக துக்கிதாவென்பவள்யார்?

விடை. வேறொருநாயகியிடத்துத் தனதுகணவன் கூடிய அடையாளத்தன்மையை அறிந்துவிசனப்படும் நாயகியே யாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. எகூ-வது பாட்டு.

விஞ. வக்ரோக்தி கர்விதாவென்பவள் யார்?

விடை. கோணவார்த்தைகள் பேசுவதில் தான்சமர்த்துடையவளென்று கருவித்திருக்கும் நாயகியேயாம்.

வினா. இதிலேதேனும் பேதங்களுண்டோ?

விடை. ப்ரேம கர்விதாவென்றும், சவுந்தர்ய கர்விதாவென்றும் பேதங்களுண்டு.

வினா. ப்ரேமகர்விதாவென்பவள் யார்?

விடை. தனது நாயகன் தன்னிடத்திலுள்ள பிரியத்தைக்குறித்துக் கருவமடைய நாயகியேயாம்.

(உ-ம்.) சி. ர. மு. ரு. ௮௧-வது பாட்டு.

வினா. சவுந்தர்ய கர்விதாவென்பவள் யார்?

விடை. தான்மிக்க அழகோடு கூடியிருக்கிறேனென்று கருவமடையு நாயகியேயாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. ௮௨-வது பாட்டு.

வினா. மானவதியென்பவள் யார்?

விடை. தன்னிடத்தில் உண்டாயிருக்கும் கோபக்குறிப்பை வெளியாகக் காட்டுகின்ற நாயகியேயாம்.

வினா. ஷிமானம் எத்தனைவகைப்படும்.

விடை. குருமானமென்றும், மத்யமானமென்றும், லகுமானமென்றும் மூன்றுவகைப்படும்.

வினா. குருமானம் எவ்விதத்தாலுண்டாகும்?

விடை. நாயகன்வேறொருத்தியைக் கூடிய அடையாளம் நாயகிக்குப் புலப்படத்தோற்றுதலாலுண்டாகின்றது.

(உ-ம்.) சி. ர. மு. கு. ௮௫-வது பாட்டு.

வினா. மத்யமானமெவ்விதத்தாலுண்டாகும்?

விடை. வேறொருத்திபெயரை நாயகன் சொல்லுதலாலுண்டாகின்றது.

(உ-ம்.) சி. ர. மு. கு. ௮௭-வது பாட்டு.

வினா. லகுமானமெவ்விதத்தாலுண்டாகும்?

விடை. வேறொருத்தியை நாயகன் மனக்களிப்போடு பார்க்குதலாலுண்டாகின்றது.

(உ-ம்.) சி. ர. மு. கு. ௮௯-வது பாட்டு.

வினா. மேற்சொல்லிய மானங்களெவ்விதம் நிவர்த்தியாகும்?

விடை. குருமானம், நாயகனானவன்மிகவும் வருந்திக் கேட்டுக்கொள்வதாலும், மத்யமானம், வேண்டிநின்று சிறிது மனம்வருந்திக் கேட்டுக்கொள்வதாலும், லகுமானம் எளிதாகவும் நிவர்த்தியாகும்.

(உ-ம்.) சி. ர. மு. கு. ௮௩-௯௦-௯௧-வது பாட்டு.

இத்திறக் எந்தவகையாலும் நிவர்த்திக்கக் கூடாதிருக்கு மானம் ரசாபாசமெனப்படும்.

(மானமென்றால் கோபம்)

(உ-ம்.) சி. ர. மு. கு. ௯௨-வது பாட்டு.

வினா. இன்னும் ஏதேனும் பொதுலக்ஷணங்களுண்டோ?

விடை. ஏகசையான்னியோன்னியவியோகசையோகமென்றும், ப்ரேமாதிக்கியமென்றும் இரண்டுபேதங்களுண்டு.

வினா. ஏகசையான்னியோன்னியவியோகசையோகமென்பதென்ன?

விடை. ஒன்றேயாகிய பட்பசயனத்தில் ஒருவரையொருவர் பிரிதலும் பின்மனமகிழ்ந்து சேர்தலுமேயாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. கஅ-வதுபாட்டு.

வினா. ப்ரேமாதிக்கியமென்பதென்ன?

விடை. நாயகிபுருஷரென்பவரிடத்திலே தேகந்தானிரண்டு, உயிரொன்றேயென்று மதிக்கும்படிதோன்றுகின்ற பிரியமிகுதியேயாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. கரு-வதுபாட்டு.

முதற்குச்சம்முற்றிற்று.

# இரண்டாவதுகுச்சம்

## அஷ்டநாயகிகளின் இலக்கண ஆரம்பம்.

வினா. முதற்குச்சத்திற் சொல்லிய பதினாறுவகை நாயகிகளுந் தனித்தனி தந்நம தேதுக்களால் வேறுவித நாயகிகளாய்ப் ப்ரகாசிப்பதும் உண்டோ?

விடை. ஸ்வாதீனபதிகா, வாசகசச்சிகா, விரஹோத்கண்டிதா, விப்பிரலப்தா, கண்டிதா, கலஹாந்தரிதா, ப்ரோஷிதபதிகா, அபிசாரிகாவென்றும் பரகாசிப்பவர்களுண்டு.

வினா. ஸ்வாதீனபதிகாவென்பவள் யார்?

விடை. சதாகாலமும் தனதுமனக்குறிப்பை யறிந்தவனுகித் தன்சொற்படியே நடக்கின்ற நாயகனையுடைய நாயகியேயாம்.

வினா. இவள்சேஷ்டைகளெவை?

விடை. பூந்தோட்டங்களிலே திரிதலும், மன்மதவுச்சவம் நடத்துதலும், மதமும், அகங்காரமும், நினைக்குங்காரியங்களை முடித்தலும், சேஷ்டைகளாய்ப் பிரகாசிக்கும்.*

(உ-ம்) சி. ர. இ. கு. ரு - முதல்-எ-பாட்டு.

வினா. வாசகசச்சிகாவென்பவள் யார்?

விடை. தனது சரீரமுழுதும் அலங்கரித்துக்கொண்டு, இப்போது நாயகன்வருவானென்று கலவிக்கு வேண்டிய பதார்த்தங்களையெல்லாம் சேகரஞ் செய்துவைத்து எதிர்பார்க்கும் நாயகியேயாம்.

வினா. ஜீயாள் சேஷ்டைகளெவை?

விடை. சகிமார்களை பரிகாசித்தலும், பலவிதகோரிக்கைகளைக் கொள்ளுதலும், தாதிகளை வினவுதலும், சேஷ்டைகளாய் ப்ரகாசிக்கும்

(உ-ம்) சி. ர. இ. கு. க. முதல்-க௫-பாட்டு.

வினா. விரஹோத்கம்டிதா வென்பவள்யார்?

விடை. தாங்கள்குறித்த விடத்திலிருந்துகொண்டு இதுவரை நாயகன் கூடுதற்கு வரவில்லையேயென்று நிறைந்தவிரகத்தாற் சிந்திக்கும்நாயகியேயாம்.

வினா. ஜீயாள்சேஷ்டைகளெவை?

விடை. மேனிவிளைத்தலும், புத்திமறந்து கொட்டாவி விடுதலும், அழுதலும், வருந்துதலும், நடுங்கலும், விளையாடாதிருத்தலும், பாங்கிகளிடத்தே தனது மனவிசனத்தைச் சொல்லுதலும், சேஷ்டைகளாய் ப்ரகாசிக்கும்.

(உ-ம்) சி. ர. இ. கு. க௬-முதல்-௨0-பாட்டு.

வினா. விப்ரலப்தாவென்பவள் யார்?

விடை. தாங்கள் பேசிக்கொண்ட சங்கேதத்தலத்திற்குப்போய், நாயகன்வராமையினாலே இப்படி மோசஞ்செய்தானே யென்று மனவிசனத்தால் வருந்துநாயகியேயாம்.

வினா. இவள் சேஷ்டைகள்எவை?

விடை. சரீரத்தில் வேதனையுண்டாதலும், நெடுமூச்சு விடுதலும், சகிகளைக் கோபித்தலும், விரகமதிகரித்தலும், கண்களினிடத்து நீர் பொருந்துதலும், மூர்ச்சித்தலும், சேஷ்டைகளாய்ப் ப்ரகாசிக்கும்.

(உ-ம்.) சி. ர. இ. ௫. உக-முதல்-உ௫பாட்டு.

வினா. கண்டிதாவென்பவள்யார்?

விடை. வேறேயொரு நாயகியைக்கூடின அடையாளங்களுடனே யுதயகாலத்தில் வராநின்ற நாயகனை மிகவுங் கோபிக்கும் நாயகியேயாம்.

வினா. இவள் சேஷ்டைகள்எவை?

விடை. அருத்தமில்லாத வார்த்தைசொல்லுதலும், துன்பத்தோடு தவிக்கின்ற மூச்சுவிடுதலும், சித்திரத்தைப்போற் சும்மாவிருத்தலும், கண்ணீர்க்கொள்ளுதல் முதலானவைகளும் சேஷ்டைகளாய்ப் ப்ரகாசிக்கும்.

(உ-ம்.) சி. ர. இ. ௫. உஎ-முதல்-௩க பாட்டு.

வினா. கலஹாந்தரிதா வென்பவள் யார்?

விடை. கோபத்தினாலே மதியாமற் றனது நாயகனை நிந்தித்து, அவமானப்படுத்தி வெளியே துரத்திவிட்டு அவன் போனதின் பின் மனதிரங்கி விசனப்படும் நாயகியே யாம்.

வினா. இயாள் சேஷ்டைகளெவை?

விடை. பெருமூச்சும், வலியமயக்கமும், பரிதாபமும், விரகவேதனையும், அழுகையும், உபயோகமற்ற வார்த்தை முதலானவைகளும் சேஷ்டைகளாய் ப்ரகாசிக்கும்.

(உ-ம்.) சி. ர. இ. கு. ௩௩-முதல்-௩௭ பாட்டு.

வினா. ப்ரோஷித பதிகாவென்பவள் யார்?

விடை. தனது நகரத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய் மறுதேயத்திலிருக்கின்ற நாயகனை மனதிலே நினைத்து உருகிவருத்தப் படுகின்ற நாயகியேயாம்.

வினா. இயாள்சேஷ்டைகளெவை?

விடை. தசாவஸ்தைகளும் சேஷ்டைகளாய் ப்ரகாசிக்கும்.

(உ-ம்.) சி. ர. இ. கு. ௩௯-முதல்-௪௩ பாட்டு

வினா. அபிசாரிகா வென்பவள் யார்?

விடை. நாயகன் தன்னை அநுசரிக்கவாவது, தான்

| | |
|---|---|
| | அவனை யனுசரிக்கவாவது, தகுந்தவை களைச்செய்யும் நாயகியேயாம். |
| வினு. | அடியாள் சேஷ்டைகளெவை? |
| விடை. | அவ்வவ் வேளைகட்கேற்ற வாபரணங்களைத் தரித்தலும், சந்தேகமும், புத்திவல்லமையும், கபடமும், அசாத்தியகாரிய முயற்சியும், இந்த வைந்தும் சேஷ்டைகளாய் ப்ரகாசிக்கும். |
| | (உ-ம்.) சி. ர. இ. கு. சரு-முதல்-சக பாட்டு. |
| வினு. | மேற்சொல்லிய அபிசாரிகையில் ஏதேனும் பேதங்களுண்டோ? |
| விடை. | மேற்சொல்லிவந்த அஷ்டவித நாயகிகளுக்கு முக்தாதி பேதங்களும், பரகிய்யா சாமான்யாவென்னும் பேதங்களும் உண்டா யிருப்பதுமாத்திர மல்லாமல், மிகுதியாய், சந்திரிகா பிசாரிகை யென்றும், திவாபிசாரிகை யென்றும், இரண்டு பேதங்களுண்டா யிருக்கின்றன. |
| வினு. | சந்திரிகா பிசாரிகையென்பவள்யார்? |
| விடை. | நிலவில் மேற்சொல்லியபடி நடத்தப்பட்டவளேயாம். |
| | (உ-ம்.) சி. ர. இ. கு. ரு௦ - வதுபாட்டு. |
| வினு. | திவாபிசாரிகையென்பவள் யார்? |

விடை. பகலில் மேற்சொல்லியபடி நடத்தப்பட்ட வளேயாம்.

(உ-ம்.) சி. ர. இ. கு. ௫௩ - வதுபாட்டு.

வினா. நாயகிகளின் விரிதொகை யெத்தனை?

விடை. முதற் குச்சத்திற் சொன்ன பதினாறுவகை நாயகிகளும், கிரமப்படி இந்தகுச்சத்திற் சொல்லிய அஷ்ட நாயகிகளைக் கொண்டு தொகையை விரிக்குங்கால், நூற் றிருபத்தெட்டு நாயகிக ளாவர், அவர்கள் உத்தமாதிகுண சம்பந்தத்தால் முந்நூற்றெண்பத்துநான்கு நாயகிகளாவர். இன்னுந திவ்யாதி பேதத்தால் ஆயிரத்து நூற்றைம்பத்திரண்டு நாயகிகளாவர். சாதிபேதத்தாற் கணக்கிடப் புகின் அநேகராயிருப்பர்.

வினா. மேல்வழங்கிவந்த ஸ்வாதீனபதிகாதி பேதங்கள் முக்தாவுக்கும் பொருந்துவ துண்டோ?

விடை. பொருந்த மாட்டாதுகள் எனினும் சிலகிரந்தகர்த்தர்கள் முன்னால் பொருந்துமென்று அறிவிக்கும் என்பர்.

வினா. இந்தவிதமாக வழங்கிய பலநாயகிகளினுஞ் சம்பந்த மொன்றுமில்லாத வேறு சில நாயகிகளும் பிரகாசிப்ப துண்டோ?

விடை. ப்ரவச்சத்பதிகா வென்றும், சமாகச்சத்பதிகாவென்றும், இரண்டுவித நாயகிகள் ப்ரகாசிப்பதுண்டு.

வினா. ப்ரவச்சத்பதிகா வென்பவள்யார்?

விடை. அந்தக்ஷணத்திலே ஊர்பயணஞ்செய்ய நிச்சயித்தபுருஷனையுடைய நாயகியே யாம்.

வினா. மேற்படியாள் சேஷ்டைகளெவை?

விடை. மனவருத்தமும், மருண்டபார்வையும், தாபமும், மூர்ச்சையும், பெருமூச்சும், தொண்டையிறுகிய சொல்லும், கண்ணீர்விடுதலும், பயணந் தடைக்குறிமுதலானவையும் சேஷ்டைகளாய் ப்ரகாசிக்கும்.

(உ-ம்.) சி. ர. இ. கு. ருசு-முதல்சு0-பாட்டு.

வினா. சமாகச்சத்பதிகா வென்பவள்யார்?

விடை. தனதுபதி தேசசஞ்சாரத்தி லிருந்து வரக்காணும் நாயகியேயாம்.

வினா. இஷியாள் சேஷ்டைகளெவை?

விடை. மகிழ்ச்சியும், புளகாங்கிதமும், அதிசயமான பார்வையும், விரகஞ்சாந்தப் படுதலும், புன்சிரிப்பும், வேடிக்கை யாக முந்திய சமாசாரங்களைப்பேசிப் பாராட்டுதலும், முகமலர்தலும், ஒன்றுமறியா திருததலும், ஆனந்தபாட்பமும், குறிப்பு நிறைவேறுதலும், முதலானவைகளும் சேஷ்டைகளாய் ப்ரகாசிக்கும்.

(உ-ம்.) சி. ர. இ. கு.சுஉ-முதல்-சுசு-பாட்டு.

வினா. மேற்குறித்த நாயகிகளுக்கு உதவிசெய்யும் பெண்களின் பெயரென்ன?

விடை. சகியென்றும், தூதியென்றும், பெயருடைய விரண்டுபெண்களுமுண்டு.

வினா. சகியென்பவள் யார்?

விடை. அருமையுடனே நிரம்பவும் விசுவாசித்து நாயகி மனமகிழும்படி அவளது பக்கத்தே பொருந்தியிருப்பவளேயாம்.

வினா. இயாள் சேஷ்டைகளெவை?

விடை. அலங்கரித்தலும், உபாலம்பனம் அல்லது நிந்தித்தலும், சிக்ஷையும், பரிகாசமும், அவட்குரியகுணங்களாய்ப்ரகாசிக்கும்.

(உ-ம்.) சி. ர. இ. கு. ௯அ-முதல்-எ௨ பாட்டு.

வினா. தூதியென்பவள்யார்?

விடை. தூதுசெய்வதற்குத் தகுந்தவளேயாம்.

வினா. இயாள்சேஷ்டைகள் எவை?

விடை. விரகத்தையறியப்படுத்துதலும், சேர்க்குதலும் அவட்குரிய குணங்களாய் ப்ரகாசிக்கும்.

(உ-ம்.) சி. ர. இ. கு. எ௩-முதல்-எ௪ பாட்டு.

நாயகிகளின் இலக்கணங்கள்

முற்றிற்று.

---

இரண்டாவதுகுச்சம்

முற்றிற்று.

---

## மூன்றாவதுகுச்சம்.

## நாயகர்களின் இலக்கண ஆரம்பம்.

வினா. மேலெடுத்துச் சொல்லிய நாயகிகளுக்கு உரியவர்களாகிய நாயகர்களின் பேத மெத்தனை?

விடை. நாயகர்கள் பதி யென்றும், உபபதியென்றும், வைசிகனென்றும், சொல்லப்பட்ட மூவர்களாய் வழங்குவார்கள்.

வினா. அவர்களுள் பதியென்பவன் யார்?

விடை விதிப்படி மணஞ்செய்துகொண்ட நாயகனேயாம்.

(உ-ம்.) சி. ர. மூ. கு. ஙு-வதுபாட்டு.

வினா. உபபதியென்பவன் யார்?

விடை. ஆசாரமுதலியவரம்புகெடும்படி வஞ்சனையாக நடக்கும்நாயகனேயாம்.

(உ-ம்.) சி. ர. மூ. கு. கரு-வது பாட்டு.

வினா. வைசிகனென்பவன் யார்?

விடை. வேசியருடைய சரசகிரீடை யின்பத்தையே நிரம்பவும் விரும்புகின்ற நாயகனே யாம்.

(உ-ம்.) சி. ர. மூ. கு. கரு-வது பாட்டு.

வினா. மேற்சொல்லிய பதியென்பவனிடத்து ஏதேனும் பேதங்களுண்டோ?

விடை. அனுகூலனென்றும், தக்ஷிணனென்றும், திருஷ்டனென்றும், சடனென்றும், வகுக்கப்பட்ட நான்கு பேதங்களுண்டு.

வினா. அனுகூலனென்பவன் யார்?

விடை. அன்னியமாதர்களைக் கனவினும் எண்ணாதவனுகி எப்போதும் தனதுகுல நாயகியின்மீது அன்புமிகுந்திருக்கும் நாயகனேயாம்.

(உ-ம்.) சி. ர. மூ. கு. ரு-வது பாட்டு.

வினா. தக்ஷிணனென்பவன் யார்?

விடை. பலநாயகிகளிடத்திலும் ஒரேதன்மையாகப் பிரியம்வைத்துநிற்கும் நாயகனேயாம்.

(உ-ம்.) சி. ர. மூ. கு. கூ-வது பாட்டு.

வினா. திருஷ்டனென்பவன் யார்?

விடை. தான் அபராதஞ் செய்திருந்தும் அதிற்சந்தேகமிலாதவனுகி நாயகியின் முன்னேபோய்ப் பின்னும் அந்தநாயகி பரிகரிக்கக்கண்டும் அவளைவிட்டு விலகாமற் சொந்தம்பாராட்டி யதிகபிரியத்தைக்காட்டும் நாயகனேயாம்.

(உ-ம்.) சி. ர. மூ. கு. அ-வது பாட்டு.

வினா. சடனென்பவன்யார்?

விடை. பெண்களினிடத்தில் கபடமாகிய வித்தைதை யைச் சாதிக்குங் கனமான சாமர்த்தி யத்தைப்பெற்றநாயகனே யாம்.

(உ-ம்.) சி. ர. மூ. கு. ௯-வது பாட்டு.

வினா. மேலே சொல்லிய உபபதிக்கு ஏதேனும் பேதங்கள் பொருந்தி யுள்ளனவோ?

விடை. அநுகூலாதிபேதங்கள் பொரிந்தி யுள்ளன வாயினும், சடத்துவமே முக்கியமா யிருக்கும்.

வினா. வைசிகனில் ஏதேனும் பேதங்களுண்டோ?

விடை. உத்தம, மத்திம, அதம, வைசிகனென்றபே தங்களுண்டு.

வினா. உத்தமவைசிகனென்பவன்யார்?

விடை. நாயகியானவள் எவ்வளவுகோபங் கொண் டாலும் உபசாரங்களை யவளுக்கேற்றப டி பிரியமுற்றுச் செய்யும் நாயகனே யாம்.

(உ-ம்.) சி. ர. மூ. கு ௧௮-வது பாடு.

வினா. மத்திமவைசிகனென்பவன்யார்?

விடை. நாயகியானவள் கோபித்தகாலத்திற்றனது கோபத்தையும் பிரியத்தையும் வெளியி ற்காட்டாமலடக்கிக்கொண்டு அந்தநா யகியினது குணங்களாலே பருவமான நிலையையறிய வேண்டுமென்று சும்மா விருக்கும் நாயகனேயாம்.

(உ-ம்.) சி. ர. மூ. கு. ௨௦-வது பாட்டு.

வினா. அதமவைசிகனென்பவன்யார்?

விடை. கிருபை, பயம், கோபம், வெட்கமுதலிய குணங்களையெல்லாம் விட்டவனாகி, பெண்களைக்கூடுஞ்சமயத்தில் இன்னது செய்யலாம், இன்னதுசெய்யலாகாதென்கிற அரதமனவிசார மில்லாதிருக்கும் நாயகனேயாம்.

(உ-ம்.) சி. ர. மூ. கு. உஉ-வதுபாட்டு.

வினா. மேற்சொல்லியசடனில் ஏதேனும் பேதங்களுண்டோ?

விடை. மானியென்றும் சதுரனென்றும். வழங்குகின்ற விரண்டுபேதங்களுண்டு.

வினா. மானியென்பவன்யார்?

விடை. மனத்தில் அதிகவுரோசமுள்ளவனேயாம்.

(உ-ம்) சி. ர. மூ. கு. கக-வதுபாட்டு.

வினா. சதுரனென்பவன்யார்?

விடை. கருவந்தங்கிய வார்த்தைகளினாலாவது செய்கைகளினாலாவது வியங்கிய முள்ள நாயகனேயாம்.

வினா. வியங்கியமென்றாலென்ன?

விடை. சாதாரணமாயிருக்கும் அருத்தத்தை யல்லாமல் வேறோர் அருத்தத்தையுங்காட்டுவதேயாம்.

(உ-ம்.) சி. ர. மூ. கு. ௧௨-௪௩- வது பாட்டு.

வினா. புரோஷிதநாயகனென்பவன்யார்?

விடை. அன்னியதேய சஞ்சாரத்தி லிருக்கும்போது தனக்கிணங்கிய நாயகியை நினைத்து மனநொருங்கும் நாயகனேயாம்.

வினா. மேற்கூறிய புரோஷிதநாயக பேதங்கள் எத்தனைவகைப்படும்?

விடை. புரோஷிதபதியென்றும், புரோஷிதவுபபதியென்றும், புரோஷிதவைசிகனென்றும் மூன்றுவகைப்படும்.

(உ-ம்.) சி. ர. மூ. கு. ௨௫ - ௨௬ - ௨௭- வது பாட்டு.

வினா. அபிஞன், நாயகாபாசனென்று மிவர்களினிலக்கணமென்ன?

விடை. பலவுங்கற்றறிந்த புத்திப்ரகாசத்தை யுடையவனே அபிஞனென்றும், அப்படிக்கறிவில்லாதவனே நாயகாபாசனென்றும் சொல்லப்படுவார்கள்.

(உ-ம்.) சி. ர. மூ. கு. ௨௧. ௩௦.வது பாட்டு.

வினா. பரிகாசகனென்பவன்யார்?

விடை. பெண்கள் மனம்நாணும்படி பொருந்திய கேலிகளைச் செய்யும் வகையில் வல்லமை மிகுந்த நாயகனே யாம்.

(உ-ம்.) சி. ர. மூ. கு. ௩௨. வது பாட்டு.

வினா. திவ்யாதி நாயக பேத மாவ தென்ன?

விடை. திவ்யத்தன்மை முதலாக ப்ரகாசிக்கின்ற மூன்று பேதங்களும், முன்னே சொல்லிய நாயகிகள் கூட்டத்திற்கு அடுத்திருப்பது போலவே நாயகர்களுக்கும் ஏற்கு மென்றறிக.

(உ-ம்.) சி. ர. மூ. கு. ௩௪-௩௫-௩௬-பாட்டு.

வினா. நருமசசிவர்கள் என்பவர்கள் யார்?

விடை. நாயகர்களிடத்தே சம்மதித்துநின்று, கிரீடைகளுக்கு வேண்டிய சகாயங்களைச் செய்வோர்களே யாம், இன்னும் விவரித்தறிவிக்குங் காலையில், அவர்கள் பீடமர்த்தகனென்றும், விடனென்றும், சேடகனென்றும், விதூஷக னென்றும் நால் வகை யோர்களாய் வழங்குவார்களே யாம்.

வினா. பீடமர்த்தகனென்பவன் யார்?

விடை. நாயகியினது கோபத்தை இனியவசனங்களினாலே மாற்று கின்றவனே யாம்.

(உ-ம்) சி. ர. மூ. கு. ௩௯. வதுபாட்டு.

வினா. விடனென்பவன் யார்?

விடை. காமசாஸ்திரத்தில் வல்லமை யுடையவனே யாம்.

(உ-ம்.) சி. ர. மூ. கு. ௪௦ - வதுபாட்டு.

வினா. சேடகனென்பவன்யார்?

| | |
|---|---|
| விடை. | சமையம்பார்த்து தலைவி தலைவர்களை யோரிடத்திற்சேர்ப்பவனேயாம். |
| | (உ-ம்.) சி. ர. மு. கு. ௬௧-வது பாட்டு. |
| வினு. | வீராஷகனென்பவன்யார்? |
| விடை. | அவயவவிகாரங்களினுலும், அப்படிப்பட்ட வார்த்தைகளினுலும், மற்றவைகளாலும் பரிகாசஞ்செய்பவனேயாம். |
| | (உ-ம்.) சி. ர. மு. கு. ௬௨-வது பாட்டு. |
| வினு. | சாத்துவிகோதய மென்பதென்ன? |
| விடை. | அன்னியருடைய இன்பத்தை மனதில் இச்சிப்பதினலே சரீரத்தில் உண்டாகின்றதோற்றமேயாம். |
| | (உ-ம்.) சி. ர. மு. கு. ௬௩-வது பாட்டு. |
| வினு. | அஃதெத்தனை வகைப்படும்? |
| விடை. | சிறுவேர்வை, அசைவின்றியிருத்தல், புளகாங்கிதம், சொற்றடுமாற்றம், நடுக்கம், காந்திகுறைதல், அழுகை, பெருமயக்கம், எனஎட்டுவகைப் படும். |
| | (உ-ம்.) சி. ர. மு. கு. ௬௩-வது பாட்டு. |
| வினு. | சிங்காரமென்பதென்ன? |
| விடை. | ரதியினுடையஸ்தாயிபாவம். அஃது சம்போக சிங்காரமென்றும், விப்ரலம்ப சிங்காரமென்றும் இரண்டுவகைப்படும். |

விஞ. சமபோக சிங்காரமாவ தென்ன?

விடை பலவித கிரீடைகளையுஞ் செய்கின்ற சமயத்தில உண்டாகுந் தன்மையே யாம்

(உ-ம்) சி. ர. மூ. கு சசா-வது பாட்டு.

விஞ விப்பிரலம்ப சிங்காரமாவ தென்ன?

விடை. தலைவி தலைவர்களில் ஒருவரை யொருவர் பிரிந்திருக்குமிடத்திற் றமதெண்ண முடிவுபெறாத அக்காலத்திற் றோன்றிய தன்மையே யாம

(உ-ம்.) சி ர. மூ கு சஅ-வது பாட்டு.

விஞ தலைவிதலைவர்கள் பிரிந்திருக்குங் காலத்தில் ஏதேனும் அவஸ்தைக ளுண்டாவ துண்டோ?

விடை. அபிலாசை, சிந்தை, ஸ்மிருதி, குணகீர்த்தனை, உத்வேகம, விலபனம், உன்மத்தம் வியாதி, ஜடதை, இலயம், என்று சொல்லப்பட்ட பத்துஅவஸ்தைகளும் உண்டாவதுண்டு.

விஞ அபிலாசை யென்றால் என்ன?

விடை. கலவியினமேல் உண்டாகும் விருப்பமே யாம.

(உ.ம்.) சி. ர. மூ கு. ருகூ-வது பாட்டு.

விஞ. சிந்தையென்றால என்ன?

விடை. இவைசெய்வதால் இவைகாணலா மென் றெண்ணுவதே யாம்.

(உ-ம்.) சி. ர. மூ. கு. ௫௪-வது பாட்டு.

வினு. ஸ்மிருதியென்றால் என்ன?

விடை. முன்னமே கொஞ்சிக்கலந்த செய்கைகளை ஞாபகம்பண்ணுவதே யாம்.

(உ-ம்.) சி. ர. மூ. கு. ௫௫-வது பாட்டு.

வினு. குணகீர்த்தனை யென்றால் என்ன?

விடை பிரியர்களுடைய குணவிசேஷங்களை அடிக் கடி யெடுத்துச்சொல்வதே யாம்.

(உ-ம்.) சி. ர. மூ. கு. ௫௬-வது பாட்டு.

வினு. உத்வேகமென்றா லென்ன?

விடை. காமத்தால் மனவருத்தமிருந்தமையால் வி லகுதற்கரிய பிறபதார்த்தங்கள் எல் லாவற்றையும் வெறுப்பதே யாம்.

(உ-ம்.) சி. ர. மூ. கு. ௫௭-வது பாட்டு.

வினு. விலபனமென்றால் என்ன?

விடை. பிரியர்களைக் குறித்துவருகின்ற கற்பனையு டைய சொற்களேயாம். அதில் உற்க ண்டையென்றோர்பேதம் தோன்றும். அது தமது ஆத்திரத்தால் பிரயோச னமொன்றுமில்லாதவைகளாகப் பேச ப்பட்டவார்த்தையேயாம்.

(உ-ம்.) சி. ர. மூ. கு. ௫௮-வது பாட்டு.

வினா. உன்மத்தமென்றாலென்ன?

விடை. மனவருத்தத்தாலுண்டாகிய ப்ரமையே உன்மத்தமெனப்படும். இவ் உன்மத்தம் காயகமென்றும், வாசகமென்றும் இருவகையாகும்.

(உ-ம்.) சி. ர. மு. கு. ௫௧-௬0வது பாட்டு.

வினா. வியாதியென்றால் என்ன?

விடை. மன்மதபாணங்கள் அடர்ந்து வாதிப்பதாலுண்டாகிய விரகசுரம், மேனிவிளைப்பு முதலானவைகளேயாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. ௬௧-வது பாட்டு.

வினா. ஜடதையென்றால் என்ன?

விடை. மோகவிகாரங்களை மாத்திரமறிந்து மற்றொன்றையும் அறியாதிருக்கும் தன்மையைப்பெற்ற வுயிருள்ளதாகிய கொடிய அவஸ்தையேயாம்.

(உ-ம்.) சி. ர. மு. கு. ௬௨-வது பாட்டு.

வினா. இலயமெனறால் என்ன?

விடை. இலயமென்பது இதமுடைய தன்றாதலால் அதற்கு இலக்கணவிலக்கியங்கள் சொல்லவேண்டுவன வல்ல.

வினா. தெரிசனமென்றால் என்ன?

விடை. அன்பர்களில் ஒருவரையொருவர் காணும் காக்ஷியேயாம்.

(காக்ஷியென்றால் பார்வை.)

வினா. அஃது எத்தனை வகைப்படும்?

விடை. சொப்பன தெரிசனமென்றும், சித்திர தெரிசனமென்றும், எதார்த்த தெரிசனமென்றும், மூன்று வகைப்படும்.

வினா. சொப்பனதெரிசனமாவதென்ன?

விடை. அன்பர்களை கனவினிடத்துக் காண்பதேயாம்.

(உ-ம்.) சி. ர. மூ. கு. ௯௪-வது பாட்டு

வினா. சித்திரதெரிசனமாவதென்ன?

விடை. அன்பர்களை சித்திரத்திற்காண்பதேயாம்.

(உ-ம்) சி. ர. மூ. கு. ௯௫-வது பாட்டு.

வினா. எதார்த்ததெரிசனமாவதென்ன?

விடை. அன்பர்களை உண்மையாக எதிரிற்காண்பதேயாம்.

(உ-ம்.) சி. ர. மூ. கு. ௯௯-வது பாட்டு.

மூன்றாவதுகுச்சம்.

முற்றும்.

DR U.V. SWAMINATHA IYER
TIRUVANMIYUR MADRAS 41.

## வாழி.

### கட்டளைக்கலித்துறை.

துதிவாழிவாழி சுரர்வாழி மேதினி தூயசெல்வ
நிதிவாழிநீதி நெறிவாழிவாழி நிறைந்தநந்தி
பதிவாழியின்பம் பலகலைவாழி பரிதிகதிர்
மதிவாழிசூர சிம்முலு மன்னவன் வாழியவே.

சிங்காரரசமஞ்சரி
விஞைவிடைச் சுருக்கம்.
முற்றிற்று.